85

NEP/CO/GEN/02

2006.10.09

சுற்றறிக்கை இல : 09/2006

சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும்.

**கூட்டுறவுச் சங்கங்களுக்கான வருமதிகளை அறவிடல்**

கூட்டுறவுச் சங்கங்களில் பின்வரும் வகையிலான கணக்குகளில் பெருந்தொகையான பணம் அறவிடப்படாத நிலையில் உள்ளமை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் அதே சங்கத்தில் உள்ள உறுப்பினர், பணியாளர் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

1. வியாபார / எரிபொருள் / போக்குவரத்து வருமதியாளர்.
2. நானாவித வருமதியாளர்.
3. முற்பணங்கள்.
4. பொருள் குறைவு / காசுக் குறைவு / முத்திரைக் குறைவு.
5. கடன்கள் குறுகிய காலம் / நீண்டகாலம்.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் இவ்வருமதிகள்பற்றி எதுவித தொடர் நடவடிக்கையும் மேற் கொள்வதில்லை. இவர்கள் ஒவ்வொரு வருமதிகளையும் உடனுக்குடன் அறவிடுவதற்கான வழிகாட்டலை முன்னெடுத்தல் வேண்டும். அத்தகைய கடமைப் பொறுப்பிலிருந்து இவர்கள் விலகி நிற்பதால், கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. ஓர்சில சங்கங்கள் தனது பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கமுடியாத நிலையை எட்டியுள்ளன.

இந்நிலையை அடைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்கவோ, கடன் சிபாரிசு செய்யவோ முடியாது. கூட்டுறவுச் சங்கங்களின் நிதிக்கும், சட்டத்திற்கும் பாதுகாவலனாகிய எனது பிரதிநிதியாகிய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரும், சங்கத்தின் துர்ப்பாக்கிய நிலைக்கு பங்காளியாவார். இதனை தங்கள் பிரிவிலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கும் தெரியப்படுத்தவும். விசேடமாக திருத்தப்பட்ட 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 67வது பிரிவின் கீழ் (சட்டப் பிரிவைப் பார்வையிடவும்.) எனக்குரித்தான அதிகாரம் பயன்படுத்தப்படின், சங்கத்திற்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலருக்கு எதிராக தாபன விதிக்கோவையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி நேரிடும் என்பதையும், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுமிடத்து பதவி உயர்வுகள் மற்றும் பிற நன்மைகளை இழக்க வேண்டி நேரிடலாம் என்பதையும் தெரியப்படுத்தவும்.

தங்கள் பிரிவிலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள், ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1ன் விபரங்களை உரிய சங்கத்திற்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் மூலம் உறுதிப்படுத்திப் பெற்று அப்படிவங்களை தங்கள் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, தங்கள் பிரிவுக்கான படிவம் 1இனை தயாரித்து உறுதிப்படுத்தி 2006.10.15 ஆந் திகதிக்க முன் எனக்கு அனுப்பிவைக்கவும்.

ஒவ்வொரு கணக்காய்வாளரும் தனது கணக்காய்வு அறிக்கையில் கணக்காய்வுக் காலத்தில் சங்கத்திற்கு பொறுப்பான கூ.அ.அலுவலரின் பெயர் குறிப்பிடல் வேண்டும் என்பதையும், முன்கூறப்பட்ட சங்கங்களின் வருமதிகளின் தொகுப்பினை படிவம்-1 இற்கமைய பொது அறிக்கையில் குறிப்பிடல் வேண்டும் என்பதனையும் கணக்காய் வாளர்களுக்கு தெரியப்படுத்தவும்.

அத்துடன் உரிய கணக்காய்வு அறிக்கை தங்கள் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற மாதத்திற்கான கணக்காய்வு முன்னேற்ற அறிக்கையுடன் இவ்வருமதித் தொகுப்பின் பிரதி (படிவம் 1ல் உள்ளவாறு) ஒன்று தங்களின் அவதானிப்புடன் எனக்கு முன்னளிக்கப்படல் வேண்டும்.

இச்சுற்றுநிருப அறிவுறுத்தல் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்யவும்.

**ஆ.சுப்பிரமணியசர்மா,** o/c

கூ.அ.ஆணையாளரும்,

கூ.ச.பதிவாளரும் (வகிமா.)

பிரதி:
1) பிரதம செயலாளர், வகிமா. – தகவலுக்காக.
2) செயலாளர், மா.பொ.நி.உள்ளூராட்சி கூ.அமைச்சு – தகவலுக்காக.
3) பொறுப்பாளர் கூட்டுறவு பயிற்சி நிறுவனம் - பயிற்சியாளரின் அறிதலுக்காக.